# பாரதியார் கவிதைகளில் பெண்ணியத்தின் சமூகநிலைகள்

*முனைவர் ம. அருள்தாஸ்*
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
பூம்புகார் கல்லூரி, மேலையூர், மயிலாடுதுறை மாவட்டம்
https://doi.org/10.5281/zenodo.15323805

## முன்னுரை

*தமிழ் இலக்கிய வடிவங்களில் கவிதைக் கலைக்குக்கென ஒரு தனிச்சிறப்பு உண்டு. சங்ககாலம் முதல் இக்காலம் வரை மாற்றத்திற்கு ஏற்ப இலக்கிய வகைகளிலும், வடிவங்களிலும், பலவகை மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல கவிஞர்கள் தங்களின் கவிதைகள் வழியாக சமூகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தனர். அவர்களில் முதன்மையானவராகவும், தலைச்சிறந்த கவிஞராகவும் பாரதியார் சிறந்து விளங்குகிறார். சமூகத்தில் பயன்படுத்தும் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டன. அந்த வகையில் பாரதியார் கவிதைகளில் பெண்ணிய சமூக நிலைகள் பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.*

## பெண்ணிய சமூக நிலைகள்

*பாரதியின் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளில் முன்னுரிமை பெற்று திகழ்ந்தது. பெண்ணுரிமை வாதம், பெண்களுக்கு உரிமை கொடுக்காத சமுதாயம் முன்னேற வழியில்லை என அவர் அழுத்தமாக வாதாடுகிறார். இந்நவீன யுகத்தின் கவிஞன்ஆன பாரதியும் இந்தியாவில் தோன்றிய புதிய சிந்தனைகளால் பெரிதும் கவரப்பட்டார். அவருடைய கவிதைகள் மனதில் உள்ளங்களிள் விழிப்புணர்வை ஊட்டும் வண்ணம் அமைந்தன. அக்காலத்தில் நடைமுறையில் இருந்த இளமை, திருமணம் உடன்கட்டை ஏறுதல், விதவைகளின் இழிநிலை, பெண்களுக்கு கல்வி உரிமை கொடாமை போன்ற சமுதாய வழக்கங்களில் இந்தியாவின் பெண்ணிய நிலை இழிவானது என வாதிட்டார் பாரதி.*

*பாரதியார் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், அடிமைப்பட்டு இருளில் மூழ்கி இருந்த இந்தியாவையும் உரிமையின்றி வாழும் இந்தியப் பெண் இனத்தையும் அவர் ஒன்றாக கூர்ந்து ஆராய்கின்றார். நாம் பிறந்த நாட்டையும் தனது மொழியையும் தாயாகவே வணங்கினார் என்பதை பின்வரும் பாடலில் காணலாம்.*

***போற்றி போற்றி! ஜயஜய போற்றி! இப்***
***புதுமை பெண்ணாளி வாழிபல் லாண்டிங்கே***
***மாற்றிவையம் புதுமையுறச் செய்து***
***மனிதர் தம்மை அமர்களாக்கவே !***

*என பாடல்களின் வழியாக வெளிப்படுத்திக் காட்டுகிறார்.*

*பெண்கள் கல்விக் கற்றுப் பெருமை பெற்று பாரதி கண்ட புதுமை பெண்ணாகவும் புரட்சிப் பெண்ணாக இருத்தல் வேண்டும். விவேகானந்தருடைய ஞானப்புதல்வி ஆகிய நிவேதிதா தேவியை ஞானகுருவாக கொண்டவர் பாரதியார் ஆவார்.*

## பெண் விடுதலை

*பாரதியார் பாடல் புலமையைக் கவிஞர் வைரமுத்து அவர்கள் பதினொரு வயதில் தமிழ் அவனுக்கு பாரதி என்னும் பட்டங்கட்டியது. பாரதியின் கவிதைகள் சமூக விழிப்புணர்வு விடுதலை உணர்வையும் வெளிப்படுத்துகிறார். பாரதியிடம் இயல்பாகவே காணப்பட்ட சுதந்திர எண்ணம் சமூக சீர்திருத்தம், அரசியல் மறுமலர்ச்சி பெண் விடுதலை சார்ந்த ஆர்வமாயும், நிவேதிதா தேவியை சந்தித்த பின் தீவிரமடைந்தனர். பெண்ணுக்கு சமூக*

விடுதலை கிடைக்காமல் நாடு அரசியல் விடுதலை அடைவதில் பயனில்லை என்ற எண்ணத்திற்கு வித்திட்டவர். நிவேதிதா தேவி அவளுக்கு நிவேதனமாய் அன்பினுக்கோர் கோயிலாய், அடியேன் நெஞ்சில் இவளுக்கு ஞாயிறாய் என நிவேதா தேவியை போற்றுகிறார்.

பெண் விடுதலை, பெண்ணுரிமை, ஆணுக்குப் பெண் சமம், பாரதி புதுமைப் பெண் பாடலில் அவர் பெண்ணுக்கு புது இலக்கணம் உருவாக்குகிறார். அஞ்சியும் அடங்கியும் தலைகுணிந்தும் நடப்பவளே பெண் எனும் பழமை வாய்ந்த கருத்துக்கள் வீராவேசத்துடன் எதிர்க்கிறார். இதனை,

***பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்***
***பேசிக்களிப்பொடு நாம்பாடக்***
***கண்களி லேயொளி போவுயிரில்***
***கலந்தொளிர் தெய்வம் நற்காப்போமே்***[2]

எனதன் பாடலில் இருந்து பெண் விடுதலையை பாரதி கூறுகிறார். இன்றைய சமுதாய வளமையை பாரதி அக்காலகட்டத்தில் பிழையென அறிந்து கொண்டு எதிர்த்து வந்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண்ணுரிமைக்கும் பெண் விடுதலைக்கும் ஆவேசமாக குரல் கொடுத்தார். மகாகவி பாரதி இதனை,

***மாதர் தம்மை இழிவு செய்யும்***
***மடமையைக் கொளுத்துவோம்***
***வைய வாழ்வு தன்னில் எழுந்த***
***வகையினும் நமக்குள்ளே***[3]

எனும் பாடல் மூலம் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தனத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தார்.

### பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள்

ஆணுக்கு நிகராக கல்விக் கற்று தொழில் செய்து சமுகத்தின் சம உரிமைப் பெற்றுவாழ முற்படும் நவீனயுகப் பெண்ணை பாடுகின்றன. பெண்களின் இன்றைய நிலை சமூகப் பொருளாதார அரசியல் மேலாதிக்கத்தினால் எவ்வாறு ஒடுக்கப்பட்டுள்ளது என கூறுகிறார். இன்றைய சமுதாயத்தில் பெண்ணியச் சிந்தனைகள் வளப்படுத்தவும் அவற்றின் அடிப்படைகளில் பல நற்கருத்துகளை நடைமுறைபடுத்தவும் வேண்டும் என இதனை,

***தலையில் பூ விலங்கு***
***கையில் பொன்விலங்கு***
***காலில் வெள்ளி விலங்கு***
***சுவாசத் தடைக்கு***
***மூக்கில் கல் விலங்கு***
***ஒவ்வொரு மூச்சிலும்***
***அவர் விலங்குகளை நுகர்கிறாள்***[4]

என பெண்களின் இன்றைய நிலையைப் பற்றி பெண்ணியக் கவிஞர் கூறுகிறார்.

### பெண்களுக்கான சமத்துவம்

பெண்களுக்கு ஆண்களைப் போலவே சமமாகச் சொத்துரிமைகளும் வாரிசு பாத்தியதைகளும் கொடுக்கப்பட வேண்டும். பெண்களும் ஆண்களைப் போலவே எந்தப் பணியையும் ஏற்று நடத்த சம உரிமையும் வாய்ப்பும் தரப்பட வேண்டும். குடும்ப வாழ்வில் சமத்துவம் இருந்தால் தான் ஆண் பெண் இருவரிடையே ஏற்றத்தாழ்வு இல்லாத நிலை ஏற்படும் என்ற கருத்தின் அடிப்படையில் தான் சமத்துவத் தேவையை அவசியம் எனக் குறிப்பிடுகிறார். தங்கள் உரிமைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடுகின்ற காலமிது பெண்ணியச் சிந்தனைகளையும், பெண்ணியம் பற்றிய வரலாற்றை நோக்கும் போது காலங்கள் தோறும் பல மாற்றத்தைப் பெறுகின்றன. பெண்ணியம் என்பதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டு வருகின்றன. அவ்விளக்கங்களுக்கிடையே வேறுபாடுகள் இருந்தாலும் அடிப்படையில் அவை பெண்ணியம் என்பதற்குப் பாலியல் சமத்துவம் என்ற பொருளைத் தந்து நிற்கின்றன. பரந்த அளவில் பெண்ணியம் என்ற சொல் பெண் எந்த ஆணுக்கும் நிகரானவளே எந்த நிலையிலும் எந்த காலத்திலும் அவள் அடக்கி வைக்கப்படக்கூடாது.

### பெண்களின் உயர்வு

பாரதியின் பாடல்களில் புரட்சியும், விழிப்புணர்வும் பெரும்பாலான பாடல்களில் அமைந்திருக்கின்றன. அதுவும் குறிப்பாக பெண்களின் சுதந்திரம், உரிமைகள், கல்வி அவர்களது வாழ்வில் முன்னேற்றம் புரட்சிகரமாக திகழ்கிறது. நம் நாட்டு பெண்களின் நிலை

என்ன என்பதை சமூக அக்கரைக் கொண்ட ஒவ்வொருவரும் நினைத்து பார்க்க வேண்டும். நாடு முழுவதும் நகரங்கள், கிராமங்கள், பெருந்தோட்டங்கள் இவை அத்தனை இடங்களிலும் பெண்களின் முன்னேற்றம் ஒரே சீராக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது. ஆண் மகனின் கடமை. அது மட்டுமல்லாது பாரதியின் மிக முக்கிய கனவு நிறைவேறிவிட்டதா? இல்லையென்றால் அவை நிறைவேற நம்முடைய பங்களிப்பு அவசியம் என்பதை குறிப்பிடுகிறார். இதனை,

**புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்**
**பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்**
**சது மறைப்படி மாந்தர் இருந்த நாள்**
**தன்னிலே போது வான் வழக்கமாம்[5]**

எனும் தான் பாடலை வாழும் காலத்தை பாடுவதும் கவிஞன் காலத்திற்கும் அப்பாலும் என்றும் நிலைத்து நிற்கும் கருத்தைப் பாடுபவன் பாரதியார் ஆவர். பாரதியின் சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரத்தில் முன்னுரிமைப் பெற்றுத் திகழ்வது பெண்ணுரிமை இயக்கம், கதை பாடல், செய்யுள், கவிதை, கட்டுரை போன்ற எண்ணற்றப் படைப்புகள் அனைத்திலும் பெண்ணுரிமைக்கு குரல் கொடுத்தார்.

## சமுதாயத்தில் பெண்களின் இன்றைய நிலை

சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்படும் துன்பங்களையும், பெண்களால் பயனடையும் ஆண்களைப் பற்றியும் சுட்டிக்காட்டியுள்ளார். தற்போது மறுமணம் என்பது இன்றைய காலத்தில் சுலபமாகிவிட்டது. எனவே மேலை நாடுகளில் பரவிக் கொண்டிருந்த பெண் விடுதலை இயக்கத்தின் முதல் அடிப்படையில் ஆண்களுக்கு பெண்கள் அடிமை என்ற நிலை ஒழிய வேண்டும். இதனை,

**போற்றிதாய் என்று தாளங்கள் கொட்டா!**
**போற்றிதாய் என்று பொற்குழலுதடா!**
**காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்**
**காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே[6]**

என்ற இந்த பாடலின் மூலம் போற்றி தாய் என போற்றுகிறாள். பெண் விடுதலை கும்மியோ விடுதலை பெறுவர் என பெண்கள் உற்சாகக் கும்மி அடிக்கிறது என இப்பாடல் வழியாக அறியப்படுகின்றது.

## முடிவுரை

இக்கால இலக்கியங்களில் கவிதை, சிறுகதை, நாடகம், நாவல், போன்ற பலவகை இலக்கியங்கள் தோன்றினாலும், புதுக்கவிதை என்பது சமுதாயத்தை மேம்படுத்தும் கருவியாக அமைந்துள்ளது. பாரதியின் சமூகச் சீர்திருத்தப் பிரச்சாரத்தில் பெண்ணுரிமைப் பற்றி பெரிதும் பேசப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் ஆணுக்கு பெண் சமம் கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் சொத்துரிமை, விளையாட்டுத்துறை, சட்டத்துறை போன்றவற்றிலும் ஆணுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் பெண்களே சாதனையாளர்களாகவும் விளங்கி வருகின்றனர். அவைகளில் பாரதியாரின் பெண்ணியக் கவிதைகள் இச்சமூக நிலைகளை மாற்றி அமைத்துள்ளன என இதன் வழியாக அறிய முடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணிய பாரதி.சி. பாரதியார் கவிதைகள் புதுமைகள், ப.10
2. மேலது, ப.429
3. மேலது, ப.52
4. பெண்ணிய சிந்தனைகள், ப.57
5. சுப்பிரமணிய பாரதி. சி. பாரதியார் கவிதைகள் புதுமை பெண், ப.431
6. சுப்பிரமணிய பாரதி சி. பாரதியார் கவிதைகள் பெண்மை, ப.433

## ஆய்விற்கு துணைநின்ற நூல்கள்

1. சுப்பிரமணிய பாரதியார். சி. பாரதம் போற்றும் பாரதியார் கவிதைகள், திரு.குமரன் (ப.ஆ) மு.ப.-2017 லியோ புக்பப்ளிஷர்ஸ், சென்னை.
2. கண்ணகி கு.பெண்ணியச் சிந்தனைகள், மு.ப. ஆகஸ்ட் 2010, கார்த்திக் பிரிண்டர், சிவகாசி.
3. காவ்யா சண்முகசுந்தரம் பேர.சு.டாக்டர். பெண்ணியம் (காவ்யா) மு.ப.பிப்ரவரி - 1994 இராசக்கிள்ளி பிரிண்டர்ஸ் சென்னை.
4. அரங்க மல்லிகா முனைவர் - தமிழ் இலக்கியமும் பெண்ணியமும் மு.ப.நவம்பர் - 2002 இ.ப. - ஜீன் 2006 மு.ப. ஜீலை 2011, பாவை அச்சகம், சென்னை.